# குரு களம்

## ஆசிரியர் தின மலர்

## 2003



மண்முனைப் பற்று கல்விக்கோட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருகளம் மலர் அமைப்புக்குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.தா.பரசுராமபிள்ளை<br>கோட்டக்கல்விப் பணிப்பாளர்<br>மண்முனைப்பற்று. |
| மலராசிரியர் | : | திரு.வே.குழந்தைவேல் |
| மலர்க்குழு உறுப்பினர்கள்: | | 1. திரு.ந.சிதம்பரமூர்த்தி<br>2. திரு.மூ.அருளம்பலம்<br>3. ஜனாப்.ஏ.எம்.ஹிலுறு<br>4. திரு.க.ஜெயசுந்தரம்<br>5. ஜனாப்.ஐ.எல்.எம்.தாஸிம் |
| வெளியீடு | : | கல்விக்கோட்டம்<br>மண்முனைப்பற்று. |
| அச்சுப்பதிப்பு | : | ஓர்கிட் பிறின்டர்ஸ்,<br>119, காங்கேயனோடை-12,<br>ஆரையம்பதி. |
| கணணிப்பொறி | : | ஸக்ஸஸ் இன்டர்நசனல்,<br>இல.27, பிரதான வீதி,<br>காத்தான்குடி. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மேலதிக மாகாண கல்விப் பணியாளர்
## தி.பொன்னம்பலம் அவர்களின்
## வாழ்த்துச் செய்தி.


சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மண்முனைப்பற்று பிரதேச அதிபர், ஆசிரியர்களால் வெளியிடப்படும் குருகளம் என்ற மலருக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பாடசாலையானது பிள்ளையொன்றை அவன் வாழப்போகும் எதிர்காலச் சமூகத்தில் பொருத்தப்பாடுடையவனாக மாற்றியமைப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது. இதற்காகப் புத்தகக் கல்வியுடன் பிள்ளைகளிடமுள்ள தனிப்பட்ட ஆற்றல்களை விருத்தி செய்வதிலும் விழுமியம் கூடிய கல்வியை அளிப்பதிலும் பாடசாலை தனித்துவத்தன்மை கொண்டதாக அமைகின்றது.

எதிர்காலத்தில் சிறந்த பிரசையாக தனது பிள்ளை வாழவேண்டுமென விரும்பும் பெற்றோர் பல எதிர்பார்ப்புகளுடன் அவரை பாடசாலையில் சேர்க்கின்றனர். அதிலும் குறிப்பாக பிள்ளைகளின் ஆரம்ப வாழ்க்கை பாடசாலையில் அமைவதால் அவர்களின் கல்வி மற்றும் பண்புகள் விருத்தியில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இவ்வாறான பெரும் பொறுப்புகளையுடைய ஆசிரியர்களின் சேவையை கௌரவிப்பதிலும், அவர்கள் மீது சமூகத்தின் பார்வையை ஈர்ப்பதிலும் சர்வதேச ஆசிரியர் தினம் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனைய சேவைக்குமில்லாத கௌரவத்தையளிக்கும் ஆசிரியர் தினத்தினூடாக பெற்றோர் - ஆசிரியர், ஆசிரியர் - மாணவர் உறவைக் கட்டியெழுப்புவதுடன் தனது தொழில்சார் மேன்மைக்கான உறுதியான செயற்பாடுகளிலும் ஆசிரியர்கள் ஈடுபடுவோம் என இத்தினத்தில் திடசங்கற்பம் பூணவேண்டும் என்பதுடன் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமையவேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

தி.பொன்னம்பலம்
மேலதிகமாகாண கல்விப்பணிப்பாளர்
மட்டக்களப்பு மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் ஆசிச் செய்தி

மண்முனைப் பற்றுக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்களால் உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் குருகளம் என்னும் மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். ஆசிரியர் சேவை மகத்தானது. புனிதமானது. வருங்கால சந்ததியினை பண்புள்ள, மனித குலத்திற்கு தேவையான அறிவு, திறன், மனப்பாங்குள்ளவர்களாக உருவாக்கும் பாரிய பணி ஆசிரியர்களிடையே உள்ளது. உலகத்தின் இருளைப்போக்கி ஒளியூட்டும் பகலவனைப் போல் அறிவூட்டும், அஞ்ஞான இருள் போக்கும் தன்னலமற்ற சேவையாளன் நல்லாசிரியன். அத்தகைய ஆசிரியர்களின் சேவை நன்கு உணரப்பட்டதன் காரணத்தினால்த்தான் உலக ஆசிரியர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டு உலக ரீதியாக ஆசிரியர் போற்றப்படுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் விமரிசையாக ஆசிரியர் தினமாக மண்முனைப்பற்று ஆசிரியர்களால் கொண்டாடப்படுகிறது. இவ்வருடம் விழாவின்போது குருகளம் எனும் மலர் வெளியிடப்படுவது மிகச்சிறப்பம்சமாகும்.

இத்தகைய சஞ்சிகை ஒன்று வெளியிடப்படுவது இப்பிரதேச முயற்சியாகும். ஆசிரியர்களிடையே நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சியின் போது தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்கயையும், ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட கட்டுரை கவிதை போன்ற ஆக்கங்களையும், பிரதேச பாடசாலைகளின் பலவித தரவுகளையும் கொண்டு வெளிவரும் இச்சஞ்சிகை வருங்கால சந்ததிக்கு அவசியமான பொக்கிசமாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

திரு.எம்.பவளகாந்தன்
வலயக் கல்விப் பணிப்பாளர்
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி பீடாதிபதி அவர்களின் ஆசிச்செய்தி



ஆசிரியப் பெருந்தகைகளின் திறன்களையும் ஆற்றல்களையும் வெளிக்கொணரும் "குருகளம்" எனும் இவ்வெளியீட்டுக்கு ஆசியுரை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஐக்கிய நாடுகள் சபையானது தினமும் பல்வேறு ஞாபகார்த்த தினங்களை பிரகடணப்படுத்தி வருகின்றது. அத்தினங்களுள் ஆசிரிய சமூகத்தினருக்கென்று ஆண்டு தோறும் ஒக்டோபர் ஆறாந்திகதியை உலக ஆசிரியர் தினமாகப் பிரகடனப்படுத்திக் கொண்டிருப்பது குரு பரம்பரைக்கு சர்வதேச உலகம் வழங்கிய உரிய கௌரவமாக நாம் கொள்கின்றோம்.

ஒரு காலத்தில் கல்வியானது ஆசிரியர் மையமாக இருந்து இன்று மாணவர் மையமாக மாற்றமடைந்துள்ளது. ஆனால் பெரும்பாலான நாடுகளில் மாணவர், செயற்பாடுகளுக்காக கல்வியை பயன்படுத்தாத அவலம் காணப்படுகிறது. இந்நிலைமையை நீக்கி எதிர்கால சந்ததியினரின் செயல்முறை சார்ந்த மாணவர்கல்விக்கு இட்டுச்செல்ல ஆவன செய்வது இன்றைய ஆசிரியர்களின் தலையாய பணியாக வேண்டும். அப்போதுதான் மாற்றமடைந்து வரும் உலகின் சவால்களுக்கு எமது இளைய சந்ததியினர் முகம் கொடுக்க முடியும்.

அவ்வுரிய கல்விப்பணிக்கு ஆசிரியர்கள் தம்மை ஈடுபடுத்த வேண்டுமானால் அதற்குரித்தான தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகளிலும், தொழில்சார் மேம்பாடுகளிலும் தம்மை அர்ப்பணிக்கத் தயாராக வேண்டும். அப்போதுதான் மாணவ சமூகங்களின் நெஞ்சில் நீங்காத இடத்தை ஆசிரியர் சமூகம் பெறமுடியும். அந்நிலையில் தான் ஆசிரியர் உளமார கௌரவிக்கப்படுகின்றார்.

எனவே ஆசிரியர் தினத்தை முன்னிட்டு உதயமாகும் "குருகளம்" இப்பிரதேச கல்வி வளர்ச்சிக்கும், இன்றைய உலக சவால்களுக்கும் முகம் கொடுக்கத் துணிந்துள்ளமையையிட்டு எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் வழங்குவதில் பெருமிதம் கொள்கிறேன். வாழ்க "குருகளம்".

நன்றி

சி.பாக்கியராசா M.A
பீடாதிபதி
மட்டக்களப்பு தேசிய கல்வியற்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மண்முனைப்பற்று கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களின் ஆசிச் செய்தி

ஆசிரியர் பணியானது பல்வேறு பெருமைகளையும் மருத்துவங்களையும் கொண்ட புனிதமான ஒரு பணியாகும். எமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் எமது ஆசிரியர் இப்பணியை தியாகமனப்பான்மையுடன் சிறப்பாக செயலாற்றி வருகின்றார்கள். நமது பிரதேசத்தின் சமூக, பொருளாதார, கலாச்சார பாரம்பரியங்களையும், விழுமியங்களையும் கட்டிக்காத்து வருகின்றார்கள். இவர்களுக்குத் தக்க மதிப்பும், கௌரவமும் வழங்குதல் அனைவரதும் கடமையாகும்.

இவ்வகையில் தான் உலகில் உள்ள ஆசிரியர்கள் அனைவரையும் கௌரவப்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை 1966ம் ஆண்டு செய்து கொண்ட பிரகடணத்திற்கு அமைய 1991ம் ஆண்டு ஒக்டோபர் 6ம் திகதி முதல் உலக நாடுகளில் எல்லாம் உலக ஆசிரியர் தினம் வருடம்தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மண்முனைப்பற்றுப் பிரதேச ஆசிரியர்களின் அயராத முயற்சியால் இவ்வாண்டு நாடாத்தப்படும் ஆசிரியர் தின விழாவில் முதன்முதல் வெளிவரும் குருகளம் எனும் மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சஞ்சிகையோடு இணைந்து ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களிடையே கவிதை, கட்டுரை, இசை, பேச்சுப் போட்டிகள் என்பன நடாத்தப்பட்டு அவர்கள் கௌரவப்படுத்தப்படவுள்ளமையும் மிக சிறப்பம்சமாகும்.

ஆசிரியர் சமூகம் இன்றைய கால ஓட்டத்திற்கேற்ப தன்னையும் மாற்றிக்கொண்டு நமது எதிர்கால சந்ததியினரை முழுமையான ஆளுமையும், ஆற்றலுமுடைய நற்பிரஜையாக தம்மை முழுநேரம் பணியாளர்களாக தயார்படுத்திக் கொள்வதுடன் ஆசிரிய சமூகம் சீரும், சிறப்பும், பெருமையும் பெற்ற வாழ்வு வாழ வாழ்த்துகின்றேன்.

தா.பரசுராமப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலராசிரியரின் மனப்பதிவு

உலக ஆசிரியர் தினத்தையொட்டி மண்முனைப்பற்று கல்விக்கோட்டம் ஆசிரியர்களைக் கௌரவப்படுத்தவும் அவர்களின் உள்ளார்ந்த மெய்த்திறன் வெளிப்பாட்டை அரங்கப்படுத்தவும் ஒரு களம் அமைக்க அவாவுற்றது. அதன் பிரதிபலிப்பே "குருகளம்" சிறப்பு மலரின் உருவாக்கம்.

புதிய கல்வி மறுசீரமைப்புக் கட்டமைப்பில் மாணவர்களது புத்தகங்களுக்கு முதலிடம் தரப்படுகிறது. அவ்வாறே ஆசிரியர்களும் இயங்கு நிலைக்கு வழிப்படுத்தப்பட்டுள்ளனர். ஆசிரியர்களிடையே சூக்கும நிலையில் அரும்பியுள்ள ஆக்க மெய்ப்பாட்டுத்திறனை தூல நிலைக்குக் கொண்டுவருவதற்கான போட்டித்தன்மையை வளர்த்தெடுக்க விரும்பியே "குருகளம்" ஏற்படுத்தப்பட்டது.

ஆசிரியர்களிடையே இயல்பாகவே உள்ள ஆக்கத்திறனை புடம்போட்டுத் தடம்பதிக்கச் செய்யும் நோக்கோடு முழுக்க முளுக்க ஆசிரியர்களின் ஆக்கங்களே இதில் இடம் பெறுகின்றன. அசிரியர்களின் படைப்பாற்றலுக்கும் அதீத உத்வேகத்திற்கும் கட்டியம் கூறுவதாக இதனைக் கொள்ளலாம்.

மண்முனைப்பற்றுக் கல்விக்கோட்டதில் இருந்து வெளிவரும் இம்மலரானது ஒரு வீராப்பான திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எம் பேரவா.கவிதை, கட்டுரை, சிறுகதை, தமிழ்ப்பாட்டு ஆகிய போட்டிகளை நாடாத்திய போதிலும் அவற்றில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை கணிசமாக இருக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயமே. கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகிய எழுத்தாக்கங்களுக்கான போட்டித்தலைப்புகள் மண்டபத்தில் வழங்கப்பட்டு அவற்றில் முதலாம் இடத்தைப் பெற்ற ஆக்கங்கள் இதில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் சமூகத்தாலும், சமூகம் ஆசிரியர்களாலும் கௌரவிக்கப்பட வேண்டும். இதற்கு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, பணிப்பற்று, மனிதநேயம், ஆக்கமுயற்சி என்பன அவசியமாகின்றன. ஆசிரியர்கள் விழிப்பு நிலைச் சமூகமாக இருக்கவேண்டும் என்பதே யாவரதும் எதிர்பார்ப்பாகும்.

மண்முனைப்பற்றுக் கல்விக் கோட்டம், ஆசிரியர்களின் அற்பணிப்பான சேவைக்கு அனுசரனையாக இருக்கின்றது. இச்சிறப்பு மலரினை வெளியிட பெரு விருப்போடு முன்னின்று உழைத்தவர் மண்முனைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி திரு.த.பரசுராமப்பிள்ளை அவர்கள். அன்னார் எம்மை நெறிப்படுத்தியதோடு மலர்க்குழுவின் தலைவராக இருந்து ஆசிச்செய்தி வழங்கியமைக்கு மலர்க்குழு நன்றியை நவில்வதில் நற்பெருமையுறுகின்றது.

மலரானது சீர்பெற்று சிறப்பாக வெளிவரவேண்டும் என்பதை உளமார உணர்ந்து ஆசிச்செய்திகளை வழங்கி வலுவூட்டிய எமது மேலதிக மாகாணக் கல்விப் பொறுப்பாளர் திரு.தி. பொன்னம்பலம் அவர்களுக்கும், மட்டக்களப்பு வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.எம்.பவளகாந்தன் அவர்களுக்கும் மட்டக்களப்பு தேசிய கல்விக்கல்லூரிப் பீடாதிபதி திரு.எஸ்.பாக்கியராஜா அவர்களும் மலர்க்குழு மனமுவந்த நன்றிகளை நவில்வதில் மட்டற்ற மகிழ்வுறுகின்றது. மேலும், மலரின் உள்ளடக்கத்துக்கு உரிய ஆக்கங்கள், தரவுகள் வழங்கி ஊக்கம் தந்த படைப்பாளிகள், அதிபர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகின்றன.சிறந்த முறையில் "குருகளம்" மலரினை அச்சிட்டு வழங்கிய **orchid Printers** அச்சகத்தாருக்கு எமது பாராட்டுகளும் நன்றிகளும் உரித்தாகின்றன. பண உதவி நல்கி பங்களிப்புச் செய்த மண்முனைப்பற்று அதிபா, ஆசிரியர்களுக்கு மலர்க்குழு இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதில் பரவசமடைகின்றது.

அன்புடன்
திரு.வே.குழந்தைவேல் - அதிபர்
மலராசிரியர்.
மலர்க்குழு சார்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சுருங்கியிருந்த சமூகம் இன்று விரிந்து பரந்து பல்வேறு கோணங்களிலும் விரிந்து சென்று கொண்டிருக்கிறது என்றால் மிகையாகாது. ஒரு தனி மனிதனில் இருந்து பரந்து பட்டதுதான் சமூகம், சமுதாயம் என்பதாகும். இந்த சமுதாயத்தை உயர்ந்த அல்லது மேலான அல்லது உன்னதமானதாக சமுதாயமாக ஆக்கி அமைத்தெடுக்கும் பொறுப்பு வாய்ந்த பணி அல்லது பங்கு ஆசிரியர்க்கு அன்றி வேறு யாராலும் எண்ணிப்பார்க்கவோ, அண்மித்துச் செல்லவோ முடியாது என்றால் ஆசிரியரின் மேன்மையை கூறவேண்டியதில்லை.

## உன்னத சமுதாயத்தை உருவாக்குவதில் ஆசிரியனின் பங்கு (முதல் பரிசு பெற்ற கட்டுரை)

ஆசிரியன் என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்படுகின்றன. ஆசு, இரியன், உபாத்தியாயன், குரு, போதகர் என்றெல்லாம் பெயர் வழங்கப்பட்டு அவற்றுக்கு வரைவிலக்கணமும் கற்பிக்கப்படுகின்றன. குற்றங்கள் நீக்குபவன், உபாயங்களை கற்பிப்பவன், மேன்மையானவன், நல்லுபதேசங்களை போதிப்பவன் என்றெல்லாம் பொருள் கொள்ளப்படுகின்றன. அந்த வகையில்தான் அன்று ஔவைப்பாட்டி கூட பிள்ளைகளோ, பெரியவர்களோ மதிக்கப்பட வேண்டியவர்கள், போற்றப்பட வேண்டியவர்கள் என்ற வரிசையில் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் குருவையும் அடக்கியுள்ளார்கள்.

அன்று தொடங்கி இன்றுவரை அழியாத உன்னத செல்வமாக விளங்குவது கல்விச் செல்வமாகும். இச் செல்வத்தை பெற அரு முயற்சிகள் மேற்கொண்டனர். அழியாத சொத்தினைப்பெற அரும்பாடு பட வேண்டும். அன்று நல்லதோர் சமுதாயத்தை அல்லது நல்ல பிள்ளையை நாட்டுக்கு பயன்படுமாறு உருவாக்க குருகுலக்கல்வி மேற்கொள்ளப்பட்டது. அதாவது இக்கல்வி முறை பல்வேறு பட்ட இயல்புகளையும் தன்மைகளையும் கொண்டிருந்தபோதும் விசேட அம்சமாக வாழ்கைக்கு தேவையான அறம் சார் கல்வி புகட்டப்பட்டது. அதாவது நீதிக்கதைகள், அறம் தருமம் சார்ந்த விளையாட்டுக்கள், அறத்தோடு தொடர்பு பட்ட பழக்க முறைகள் என்பனவும் அக்கல்வி முறையில் புகட்டப்பட்டதன் காரணமாகச் சமுதாயம் உன்னத நிலையில் விளங்கியமையை நாம் இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்கிறோம். இவற்றுக்கும் காரணமாக குருவானவன்தான் விளங்கியிருக்கிறான் என்றால் மிகையாகாது.

ஆசிரியன் என்பவன் இறைவனால் ஆராய்ந்து எழுதப்பட்டவன். அதாவது அப்பணிக்கு என்று இறைவனால் நியமிக்கப்பட்டவன் என்றே கொள்ளவேண்டும். அவனிடம் நிறைவான, மேலான, உன்னதமான பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒரு அறிஞன் கூறினான் "நாம் விளையாடும் விளையாட்டு நெருப்போடு விளையாடும் விளையாட்டு" என்று அதாவது நாம் மாணவர் கல்வியில் காட்டும் ஆர்வம் மேலானதாக அமைய வேண்டும். இல்லாவிட்டால் நமது வாழ்வில் நாம் என்றோ ஒரு நாள் அதன் பயனை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். ஆசிரியன் ஒரு மனிதனின் அறியாமை என்னும் இருளைப் போக்குபவன். பிள்ளைகளிடம் அல்லது சமுதாயத்தில் இருள் போல சூழ்ந்து கிடக்கும் அறியாமையைப் போக்குபவன். அன்பாலும், பணிவாலும், கருணையாலும், காருண்யத்தாலும் நிறைந்த உள்ளம் கொண்டவன் ஆசிரியன் ஆவான். அதனால்தான் இறைவனுக்கு சமமானவனாக மதிக்கப்படுகின்றான். அந்த உன்னதமான நிலையை உதறித்தள்ளுவது அனேகமானவர்களிடம் காணப்படுகின்றது. அது இறைவன் நமக்களித்த கொடையை உதாசீனம் செய்வது போன்றதாகும்.

தாய் தந்தையரின் சொற் கேளாத அடங்காத விடாப்பிடியான பிள்ளையைக்கூட சமுதாயத்திற்கு பொருத்தமான நற்பிரஜையாக உருவாக்குவதென்றால் அது ஆசிரியன் ஒருவனாலே முடியும் என்கிறது வள்ளுவம். அதாவது அறிவானது ஒருவனுக்கு அழிவு வராமல் பாதுகாக்கும் ஒரு கருவியாகும். அப்படியான சக்திவாய்ந்த கருவியை மாணவனிடம் செலுத்தி அவனை சமுதாயத்தில் மிளிரச் செய்யும் பொறுப்பு வாய்ந்த பணியானது ஆசிரியனுக்கே உரித்தானதாகும்.

"குஞ்சியழகும், கொடுந்தானை கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து நல்லம் யாம் என்றும் நடுவு நிலமையால் உண்டாகும் கல்வியழகே அழகு" என்றார் நாலடியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலை நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமானால் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் நாம் நடுவு நிலமையால் நல்லவர்கள் என்ற எண்ணம் உருவாக வேண்டும். அந்த எண்ணத்தை ஒவ்வொரு சமுதாயத்தினரிடமும் வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியருக்கன்றி வேறு யாருக்கு இயலும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள்.

சமுதாயத்திலுள்ள அத்தனை பேரும் நடுவு நிலமையிலுள்ளவர்களாக இருப்பார்களானால் உன்னத சமூகம் உருவாகத் தடையேது என்ற வினாத்தான் எழுகின்றது. கல்வியின் பெருமையை திருக்குறல் மட்டுமன்றி நாலடியார், ஆசாரக்கோவை, பழமொழிகள் ஏனைய பல் வேறு நூல்கள் எடுத்தியம்புகின்றன. அன்று செய்யுள் வடிவில் இருந்த விடயங்கள் இன்று உரைநடையில் ஆக்கப்பட்டு விட்டதனால் கல்வி முறை மாணவர்களுக்கு இலகு படுத்தப்பட்டுள்ளது. அவற்றின் பெருமையுணர்ந்து பெற்றுக்கொண்டால் நற்பிரஜையாக, சமுதாயத்திற்கு பயனுள்ளவனாக மாறமுடியும். இவற்றை நடைமுறைப்படுத்துவது அதாவது வழிபடுத்தும் பொறுப்பு ஆசிரியரையே சாரும்.

கல்வியறிவில்லாத முட்டாள் கூட கல்வியறிவு நிரம்பியவர் அல்லது கல்வியறிவு நிரம்பப்பெற்ற சூழலில் வாழ்வானாக இருந்தால் அவனுடைய செயல் பாடு முற்றுமுழுதாக மாறி விடுவதை நாம் அனுபவ ரீதியாகவும் நாளாந்த வாழ்க்கைக் கண்ணோட்டத்திலும் கண்டு கொள்கிறோம். ஆனால் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவரிடையே அப்பழக்கத்தை உருவாக்குவதில் தவறு ஏற்படுகின்றது. அதாவது நாம் நாளாந்தம் பத்திரிக்கைகளிலும் வானொலி மூலமும் ஏனைய தொலைத் தொடர்பு சாதனங்கள் வாயிலாகவும் பல்வேறு பட்ட சமுதாயத்திற்கு ஒவ்வாத அல்லது எதிர்கால சமுதாயத்தினை பாழாக்கும் செயற்பாடுகளைப் புரிவதாக அறிகிறோம். இவற்றை எண்ணிப்பார்க்கும் போதுதான் இப்பணியில் தவறு எங்கோ ஓரிடத்தில் உருவாகின்றது என்று சிந்திக்கத் தோன்றுகின்றது.

கல்விச் செல்வமானது தூய்மையான புனிதமான செல்வமாகும். கறையற்ற குற்றமற்ற செல்வத்தைப் பெற்றுக் கொண்ட ஆசிரியன் அவற்றை புனிதப் பணியாக ஆற்ற வேண்டும். அப்போது தான் உன்னத சமுதாயத்தை நாம் காண முடியும்.

இன்றிருப்பது போன்ற யுத்த சூழலையும் ஊழல் நிறைந்த தன்மைகளையும் வேறுபட்ட நிலையையும் மனிதனை மனிதனாக நினைக்கத் தவறும் மனித நேயமற்ற தன்மைகளையும், மூத்தோர், பெரியோர், ஊனமுற்றோர், வலது குறைந்தோர், குழந்தை, தாய் என்று ஈவு இரக்கம் அற்ற நிலையையும் காணும்போது கல்வியின் உன்னத பணியை நிறைவேற்றும் பொறுப்பு வாய்ந்தவர்களின் பணியை எண்ணிப்பார்க்க வேண்டி ஏற்படுகின்றது.

இன்றைய கல்வியானது பட்டம், பதவி உயர்ந்த பணம் போன்றவற்றிற்காக புகட்டப்படுகின்றது. அது போன்று கற்பவர்களும் அவற்றுக்காகவே கற்கிறார்கள்போலவும் தென்படுகின்றது. வாழ்க்கைக்குக் கல்வியின் முக்கியத்துவம் இன்னும் உணரப்படவில்லை. கல்வியின் முழுமையான உயர்ந்த பெறு பேறு எப்போது? எங்கே? என்ற வினாக்களை நாம் எமக்குள்ளே சிந்திப்போமானால் எங்கு ஒருவன் பெரியோரை மதிக்கின்றான், எப்போது ஒருவன் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கில் வளர்கின்றான், என்றொருவன் மற்றவன்படும் இன்னல் கண்டு துன்பப்படுகின்றான், என்றொருவன் மனிதாபிமானங் கொண்டு நீதியானவற்றைச் செய்ய முயல்கின்றான் அன்றுதான் அல்லது அப்போதுதான் அவனிடம் உண்மையான தூய்மையான கல்வி புகட்டப்பட்டுள்ளது உன்று நாம் கருத முடியும்.

திருமதி பு. விக்னேஸ்வரராசா ஆசிரியை
மட்/கிரான்குளம் விநாயகர் ம.வி.

அன்றைய அறிஞர்களையும் கல்விமான்களையும் நாம் சற்று கிந்தித்து பார்ப்போமானால் அவர்கள் தங்களிடம் இருந்த அறிவு போதாமையால் அவற்றை குழுவாக சேர்ந்து ஆராய்ந்தார்கள் அவற்றுக்கு விடையும் கண்டார்கள், அதனால் திருப்தியும் அடைந்தார்கள். அதாவது விபுலானந்தர் கூட தன்னுடைய "கங்கையில் விடுத்த" பாடலில் கந்தசாமி பெரியாருடன் அவர் கொண்டிருந்த நட்பினைப்பாராட்டி அந்த நட்பு பிரிந்த துயரத்தை விளக்கும்போது அவருக்கு எத்தனையோ சந்தேகங்களும் கல்வி பற்றிய தெளிவின்மையும் இருந்ததாகவும் அவற்றை எல்லாம் நிறைவேற்றிவைத்தவராகவும் அவர் மோட்ச வழியில் கூட அந்த இடத்தில் தங்கியிருப்பார் என்றெல்லாம் பாடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றையெல்லாம் நினைத்துப் பார்கரும்போது அன்றைய ஆசிரியர்களுக்கும் இன்றைய ஆசான்களுக்கும் இடையிலான வித்தியாசத்தை உணரமுடிகின்றது.

இதனை இன்னுமோர் இடத்தில் ஔவையார் கூறுகின்றார் "நற்றாமரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற் போல் கற்றானரக் கற்றாரே காமுறுவர் அல்லாத மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில் காக்கை உவக்கும் பிணம்" என்றார்.

அதாவது கற்றவர்களைக் கற்றவர்கள் தான் விரும்புவர். அதாவது கல்வி அறிவுடையவனைத்தான் கல்வியில் நாட்டம் கொண்டவர்கள் தேடுவார்கள். கல்வி அறிவு இல்லாதவன் அறிவைப் பெற விரும்பாதவன் பிணத்தை காகம் நாடுவது போல அவர்களும் கோபம்மிக்க கொடுமையானவர்களை அல்லது கயவர்களை நாடிச் செல்வர். இது கற்றவர்களின் பெருமையை விளக்க ஔவையார் கையாண்ட உண்மை. கல்வியானது ஆரம்பத்தில் வெறுப்பையும், விருப்பின்மையையும் ஏற்படுத்தும். அதன் சுவையும், அழகும், நல்ல தன்மையும் கற்றுக் கொண்டு செல்லச் செல்ல விழங்கும். அதனையும் நாலடியார் நன்கு விளக்குகின்றார் அதாவது ஆரம்பத்தில் நாம் நுனிக்கரும்பை எவ்வாறு சுவைத்து அவற்றை வெறுக்கின்றோமோ அவ்வாறுதான் கல்வியும் என்கிறார். கரும்பானது நுனியில் இருந்து சுவைத்துச் சுவைத்துச் செல்ல அடிக்கரும்பிற்கு வந்ததும் அதன் தெவிட்டாத சுவை இன்பத்தை தரும் கல்வியும அவ்வாறுதான் ஆரம்பத்தில் கசப்பாக இருப்பினும் அவற்றை வெறுத்தொதுக்காது ஒருவன் கற்பானாயின் அவன் நிறைந்த அழியாத செல்வத்தை பெற்றவனாவான்.

ஓரிடத்தில் வள்ளுவர் பெருந்தகை கூறுகின்றார். "ஒருமைக்கண் நான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து" ஒருவன் ஒரு பிறவியிலேயே கற்றுக் கொண்ட கல்வியானது ஏழு பிறவிகளிலும் நின்று உதவும் என்கின்றார். அதாவது சாதாரணமாக இவை கஷ்டப்பட்டுத் துயரப்பட்டுச் சிரமத்தின் மத்தியில் நுணுக்கமாக தூய்மையாகக் கற்றுக்கொண்ட கல்விதான் அவ்வாறு ஏழேழு பிறவிக்கும் உரித்தானது என்கிறார்.

இவ்வாறு ஒரு பிறவியில் மாத்திரம் அன்றி இனிவரும் பிறப்புக்களிலும் உதவும் உன்னத கல்வியை உரிய முறையில் சமுதாயத்தில் சென்றடையச் செய்யும் உன்னதமான பணி ஆசிரியருக்கே உரித்தானது.

எனவே ஆசிரியன் ஆனவன் தனது சுய தேவை, சுய சந்தோசம், மகிழ்ச்சி போன்றவற்றிற்காக மாத்திரம் தன்னை அர்ப்பணிக்காது தனக்குரித்தான இறைவனால் பணிக்கப்பட்ட அல்லது இறைவனால் கொடுக்கப்பட்ட இப்பணியை சமுதாயத்துக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். அதாவது வளர்ந்து வரும் இச்சமுதாயத்தில் தனக்காகவும் தனது குடும்பத்திற்காகவும் பல்வேறு தேவைகள் பல்வேறு பணிகள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இருந்த போதிலும் இப்பணியைச் செவ்வனே செய்வாராயின் நிட்சயமாக இவ்வுலகப் பேறுமட்டுமன்றி மறு உலகப் பேற்றினையும் பெற்றுப் பெருவாழ்வு அடைவார் என்பதில் ஐயம் இல்லை.

எனவே ஆசிரியன் ஆனவன் உன்னத மான சமுதாயத்தை உருவாக்கும் முழுப்பொறுப்பினையும் சுமந்து வந்து உதித்தவர் ஆகையால் அப்பணியை செவ்வனே செய்யுமாறு இத்தினத்தில் எழுதும் கட்டுரையினூடாக பணிந்து கட்டுரையை நிறைவு செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரை கல்வி நோக்கி திசை திருப்புவதில் ஆசிரியர் ஆற்றும் பணி

மனித வாழ்க்கைக்கு விழுமியம் கொடுப்பது கல்வியே. இக்கல்வி பற்றி பல எண்ணக்கருக்கள் இருந்தாலும் கற்பதன் மூலமே ஒருவன் அறிவை பெறுகிறான். மாணவரைக் கற்றலின் பால் திசை திருப்பி கற்றல் நிகழ வழிகாட்டியாக இருக்க வேண்டியது ஆசிரியர் ஒருவரின் கடமையும் பொறுப்புமாகும்.

கற்றல் ஒருவரிடத்தில் கணத்துக்குக் கணம் உருவாகும் புதிய அனுபவமாகும். இவ்வனுபவம் வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டத்தின் கீழ் நடைபெறுவதற்கு உருவாக்கப்பட்ட 'முறைசார்' கல்வியின் அடித்தளம் பாடசாலையாகும். ஆசிரியர் தொழில் ஏனையவற்றிலும் வித்தியாசமானது. ஒரு டாக்டர் போன்று கடமைகளும் பொறுப்புகளும் வரையறை செய்யப்பட்டதல்ல. பொறுப்புகளை நிறைவேற்றாததற்கு சட்ட நடவடிக்கைக்கு உற்படுத்துவதும் இல்லை ஆசிரியர் தொழில் ஆற்றுவோர் குறிப்பிட்ட தகமையைக் கொண்டிருப்பதோடு சான்றுகள், திறன்கள் மூலம் நிருபிக்கவும் வேண்டும். இருப்பினும் ஆசிரியர் தொழில் ஒரு பிரசையின் வாழக்கையைச் சீர்படுத்துவதில் அதிமுக்கிய பங்கு வகிப்பதால் இத்தொழிலை ஏனைய வருமானம் தரும் தொழில்களில் இருந்து வேறுபடுத்தி பார்க்கவேண்டும்.

ஆசிரியர்கள் சமூகத்தை உருவாக்கும் சிற்பிகள் அதனால் கல்வியின் நோக்கங்களை தெரிந்து கொண்டு மாணவர்களை கல்வியின் பால் திசை திருப்புவதும் ஆசிரியரின் பொறுப்பும் கடமையுமாகும்.

புதிய கல்வி மறுசீரமைப்பில் மாணவர்களிடம் எதிர் பார்க்கக்கூடிய சில திறன்களை வளர்த்தெடுப்பதற்காக கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அம்மாற்றங்கள் எதிர்பார்க்கக்கூடிய பலாபலன்களை தருவதற்கு ஆசிரியரின் பணி பெரிதும் இன்றியமையாததாக உள்ளது கண் கூடு. கல்வி நடவடிக்கைகளில் கற்றலும் கற்பித்தலும் இணைச்செயற்பாடாகும். கற்றல் என்பது ஒரு மாணவன் விரும்பக்கூடிய நடத்தைகளை வளர்த்தெடுக்கும் செயற்பாடாகும். இச்செயற்பாடுகள் ஆசிரியரின் வழிகாட்டுதலிலேயே நடைபெற வேண்டும் என்பதே கல்வித் திட்டத்தின் எதிர்பார்ப்பு. அத்தோடு கற்றல் கற்பித்தல் செயற்பாடானது மனித மனங்களோடும் அவர்களின் பல் வேறுபட்ட வலு, சூழல் என்பவற்றை அடியொற்றியும் நிகழ்த்தப்பட வேண்டியுள்ளன. அதனடிப்படையில் ஆசிரியரின் முழுமையான பங்களிப்பு கல்வி சீரமைப்பின் வெற்றிக்கு அடிநாதமாய் அமையும் என்பது வெள்ளிடை மலை.

ஆசிரியத் தொழில் பற்றி சமூகத்தின் மதிப்பீடு தெளிவானது. பரந்த விடயஞான முடையவராக இருப்பதைக்காட்டிலும் தெரிந்து கொண்ட விடயங்களைப் போதிக்கக்கூடிய யுத்திகளைப் பயன்படுத்தும் ஆற்றலுள்ளவர்களாக ஆசிரியர்கள் இருக்கவேண்டும். இதற்கு ஆசிரியர்கள் தொடர் கற்றலில் ஈடுபடுவதோடு சிறந்த ஆசிரியர் என்ற நம்பிக்கையைச் சமூகத்தில் ஏற்படுத்தத வேண்டும். தன் தொழிலை ஆற்றுவதில் குறுக்கிடும் எந்த இழப்பையும் இன்னல்களையும் எதிர் கொள்ளும் ஆற்றல் நல்லாசிரியனுக்கு இருக்க வேண்டியது முக்கியமானதாகும்.

தற்போது அமுலில் உள்ள புதிய கல்வித்திட்டமானது பாடவிதான உள்ளடக்கத்தில் பாரிய மாற்றமெதனையும் கொண்டு வரவில்லை. இப்போது ஆசிரியர்களின் தொழில் பற்றிய மதிப்பீடு காலத்தால் அளவிடப்படுகின்றது ஒரு ஆசிரியர் ஒரு பாட வேலைக்கு சமூகமளிக்கவில்லை என்றால் அவர் கடமை ஆற்றத் தவறிய நாற்பது நிமிட நேரமும் அந்த வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையால் பெருக்கப்பட்டு அவ்வளவு நேரமும் கல்வி முதலீட்டில் வீணடிக்கப்பட்டதாகவே கருதப்படும். ஆயினும் மாணவரது திறன்களை மதிப்பீடு செய்வதிலேதான் குறிப்பிடக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் கல்வி வரலாற்றில் இதுகாலவரை மாணவரது தகமைகள் பரீட்சைகள் மூலமே அளவிடப்பட்டது. ஆனால் இன்று பரீட்சைகள் மட்டுமல்லாது மாணவரது நடத்தைக் கோலங்களை அவதானிப்பதன் மூலமும் திறன்கள் கணிப்பிடப்படுகின்றன. ஆசிரியர்கள் தேர்ச்சி முறையை அவதானித்துக் கற்பித்தலை மேற்கொள்ளவாய்ப்புள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கல்வித்திட்டத்தில் ஐந்து திறன்கள் வளர்க்கப்பட வேண்டும். 1. தொடர்பாடற்றிறன், 2. ஓய்வுநேரத்தை பயனுள்ளவகையில் செலவிடும் திறன், 3. சூழலைப் புத்தாக்கங்களுக்குப் பயன்படுத்தும் திறன் 4. சமய விழுமியங்களை பின்பற்றும் திறன் 5. கற்றலுக்காக கற்கும் திறன் என்பனவாகும் இத்திறன்களை வளர்த்தெடுக்கும் பொறுப்பு ஆசிரியரிடமே விடப்பட்டுள்ளது.

பாடசாலை இடைவிலகல் கல்வி முதலீட்டுக்கு ஏற்படுத்தும் பெரு நட்டமாகும். வறுமை, பெற்றோரின் அக்கறையின்மை என்பன காரணங்களாக கூறப்பட்டாலும் ஆசிரியர்களின் வரவேற்க முடியாத நடத்தைகளும் ஒரு காரணியென்பதை கருத்தில் கொள்ள வேண்டும். இடைவிலகலைக் குறைப்பதில் ஆசிரியர் பெருமளவு பணியாற்ற வேண்டியுள்ளது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது பல எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யவே. இதனை உணர்ந்து செயற்படுவது ஆசிரியரின் பொறுப்பாகும் சில ஆசிரியர்கள் தங்கள் தொழிலாக கருதிச்செயற்படுவதால் பதவிக்குப் பங்கம் ஏற்படாது காப்பதில் காலம் கழிக்கிறார்கள். சமூகத்தின் முன்னகர்வுக்கான தகுதி ஆசிரியர்களால் உருவாக்கப்படுகிறது. ஒரு மாணவன் பிறழ்வான நடத்தையுடையவனானால் அதற்கான பொறுப்பு ஆசிரியர் சமூகத்தின் மீதே சுமத்தப்படுகிறது. ஆயினும் ஆசிரியர்களே முழுமையான காரணம் என்பதும் ஏற்கக்கூடியதல்ல. மாறும் சமூகச் சூழ்நிலைக்கமைவாக மனித உணர்வுகளை பின் பற்றி வாழவேண்டிய நிலை ஆசிரியர்களுக்கும் உண்டு என்ற உண்மை மறக்கப்படலாகாது.

இப்போது ஆசிரியர்களின் தொழில் பற்றிய மதிப்பீடு காலத்தால் அளவிடப்படுகின்றது. ஒரு ஆசிரியர் ஒரு பாடவேளைக்குச் சமூகமளிக்கவில்லை என்றால் அவர் கடமை ஆற்றத்தவறிய நாற்பது நிமிட நேரமும் அந்த வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையால் பெருக்கப்பட்டு அவ்வளவு நேரமும் கல்வி முதலீட்டில் வீணடிக்கப்பட்டதாகவே கருதப்படும். இவ்வாறாக தேசிய மட்டத்தில் கல்வி விரயத்தை அளவிட முடியும்.

எனவே கல்வி விரயத்தை குறைக்க வேண்டுமானால் எல்லா ஆசிரியர்களும் ஒழுங்கமைத்த செயற்பாட்டையும் ஒரே இலட்சியத்தை நோக்கிச் செல்பவர்களாகவும் இருந்தால்தான் நாம் கல்வியின் இறுதி இலக்கை அடைய முடியும். இதன் பொருட்டு தகுதியான ஆசிரியர்கள் உருவாக்கப்படுவது மிக முக்கியமானது.

கவனக் கலைப்பான்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை வீணடிக்கின்றன. இது கிராமப்புற பாடசாலைகளில் அதிகமாகவுள்ளது. வகுப்பு மாணவர்களின் அமைதியின்மையும் பதகளிப்பு உணர்வும் ஆசிரியரின் திட்டமிட்ட கற்பித்தலை திசை திருப்பி விடலாம். எனவே சிறப்பான வகுப்பறைக் கலாச்சாரத்தை பேணி உச்ச நிலையில் கற்பிக்கும்போதுதான் உண்மையான கற்றல் இடம்பெற முடியும். இதனைக் கவனத்தில் கொள்வது ஆசிரியர் பணி சிறக்க வாய்ப்பை ஏற்படுத்தும்.

உலகில் உள்ள உயர்ந்தவர்கள் யாவரும் ஆசிரியனால்தான் அந்நிலையை அடைந்தனர். அவ்வாறே சின்னாரோடு சிற்றினஞ் சேர்ந்து சிறுமைப்பட்டுச் சிதைந்து போகும் சமூகப்பிரசைக்கும் அந்த நிலைக்கும் காரணமானவர்கள் ஆசிரியர் என்பதை உணர்ந்து எமது பணி மாணவர்களை கற்றலின்பால் திருப்புவதும் திருப்பவேண்டியதும்தான். அதனை நாம் செய்வோமாக.

**திருமதி. சந்திரபவானி சரவணமுத்து ஆசிரியை**
மட்/ ஆரயம்பதி R.K.M.M.V.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைப் பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி (சிறுகதை)

**செல்வி செ. அமிர்தேஸ்வரி B.A Dip.In.Edu**
**மட்/காங்கேயனோடை அல்-அக்ஷா ம.வி**

இளந் தென்றல் வீச, இனிமையான சுகந்தமான மணம் எங்கும் பரவியது. அப்போது வாசலின் முன்னே உள்ள அழகிய பூந்தோட்டத்தில் அமர்ந்திருந்தாள் அனுலா. அவள் உள்ளத்து உணர்வுகளை அசைபோடுவது போல தோட்டத்தில் உள்ள மலர்கள் மலர்ந்து காற்றுக்கு தலையாட்டுவது போல அசைந்து கொண்டிருந்தது, அருகிலுள்ள தென்னை மரங்கள் குலைகளைத் தூக்கியபடி கம்பீரமாக நின்றன. இவற்றைப்பார்த்த அனுலா இன்று இந்த இரண்டு மாடிக்கட்டிடத்துக்கும் இவ்வழகிய பூந்தோட்டத்துக்கும் சொந்தக்காரியா இருப்பதை நினைத்ததும் ஒரு நீண்ட பெருமூச்சொன்று வெளிப்பட்டது. இந்தப் பதினைந்து வருடத்தில் நாம் அடைந்த துன்பத்தின் நிலை என்பதை எண்ணியதும் அவளது உள்ளமானது கடந்த காலத்தை இரை மீட்டியது.

அப்போது அவளுடைய இரும்புக் கதவுக்குப் பக்கத்தில் ஒரு பிச்சைக்காரப் பெண் ஒரு பத்து வயதுக் குழந்தையுடன் நின்று அம்மா ஏதாவது தாங்கம்மா சாப்பிட்டு ஐந்து நாளாச்சு என்று கூறிக்கொண்டே இருந்தாள். தாயிடம் உணவு கொடுக்கும் படி கூறிய அனுராவின் உள்ளம் முன்னோக்கிச் சென்றது. கடந்த கடந்த கால நினைவுகள் வந்து முட்டி மோதின. ஆரையூரில் பிறந்த அனுலா தனது தந்தை ராமுவோடும் தாய் சிவகாமியோடும் மூன்று சகோதரிகளோடும் மகிழ்ச்சியாக க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேற்றுக்காக காத்துக்கொண்டிருந்தாள். அவ்வேளையில்தான் பயங்கரவாதம் உச்ச நிலையில் இருந்தது. இதனால் பிறந்த ஊரிலே வாழ முடியாத நிலை. தமது தந்தையையும் உடைமைகளையும் இழந்து தாயோடும் தமக்கைமாரோடும் நடு வீதியில் நிற்பது போல் நின்றாள்.

அவ்வேளையில் தான் மட்டக்களப்பு நண்பியான உமா கைகொடுத்தாள். அவள் பிறந்தது பதுளையில், பரீட்சை எழுதி முடிந்ததும் தனது சொந்த ஊருக்கு திரும்பிவிட்ட உமாவின் காதிலே அனுலாவின் குடும்பம் தற்போது கைப்பொருள் கூட இல்லாமல் தவிப்பதாக கேள்வியுற்றாள். அனுலாவின் நிலையை அறிய உமா எழுதிய கடிதம் கிடைத்தது. அவ்வேளையில் ஊரில் மக்கள் வாழ இயலாதவாறு பயங்கர வாதத்தின் கொடுமை ஒரு பக்கம். இனக்கலவரம் இன்னொரு பக்கம், இதனால் உயிரை பாதுகாக்க பணக்காரர்கள் தம்முடைய பணத்தைக் கொண்டு வெளி நாடுகளுக்கு பறந்துகொண்டிருந்தனர்.

ஆனால் ஏழைகளோ தமது உயிரை இராணுவத்தினருக்கும் பயங்கர வாதிகளின் கொடுமைகளுக்கும் இரையாக்கிக கொண்டிருந்தனர். இவ்வேளையில் அனுலாவின் குடும்பம் மிகவும் துன்பத்துக்குள்ளாகி அன்றாட ஜீவனோபாயத்துக்குத் திண்டாடிக்கொண்டிருந்தனர். இருந்த வீட்டைத்தவிர ஏதும் இல்லாத கையறுநிலை அவ்வேளையில் அனுலாவின் உ/த பரீட்சை முடிவானது. அதிசிறப்புச்சித்தியாகக் கிடைத்தது. பல்கலைக்கழகம் செல்வதற்கு தகுதி பெற்றாள். இதே நேரம் உமாவின் கடிதம் கிடைத்தது. அனுலா! பணம், உடைமைகள் இல்லையே என்று வருத்தப்படாதே அதைவிட உன் தந்தை உனக்கு அழியாத கல்வி செல்வத்தையல்லவா தந்துள்ளர். அதைக் கொண்டே உனது குடும்பத்தைக் காப்பாற்றலாம். இக்கடிதம் கண்டதும் எங்கள் ஊரான பதுளைக்கு வந்துவிடு, நான் உதவுகின்றேன் என்று எழுதியிருந்தாள்.

இக்கடிதம் கண்டதும் அனுலாவின் மனதில் நம்பிக்கை உதயமானது. அதன்படி பதுளை சென்றபோது எதிர்காலம் துளிர் விட்டது. அனுலா பக்கத்து பாடசாலையில் தொண்டர் ஆசிரியராக சேர்க்கப்பட்டாள். ஓய்வு நேரத்தில் பிரத்தியேக வகுப்பிலும் கற்பித்தாள் பணத்தை தாயக்கு அனுப்பினாள். உமாவின் வீட்டில் சாப்பாடு இலவசமாகக் கிடைத்தது. உயர்கல்வி கற்பதற்கான தாகம் எடுத்தபோது கல்வி நிலையத்தில் கற்று வெளிவாரி கலைப்பட்டதாரி ஆனாள். கலைப்பட்டதாரியான அனுலாவிற்கு அதிஷ்டம் தேடி வந்தது. ஆசிரிய நியமனம் கிடைத்தது. அதைக்கொண்டு தனது வீட்டு வளவில் பழைய வீட்டுக்குப்பதிலாக இருமாடி கட்டிடத்தையும் அழகிய பூந்தோட்டம் ஒன்றையும் அமைத்ததோடு தங்கைமார் மூவரையும் உயர் கல்வி கற்கச்செய்து முன்னேற்றியுள்ளாள். இவற்றை செய்தது நான்தான என எண்ணி ஆச்சரியப்பட்டதுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுலாவின் தாய் சிவகாமி அடிக்கடி கூறுவாள். என் மகள் அனுலா தான் உங்கட அப்பாவையும் இழந்து கையில் இருந்த காசு, பொருளை எல்லாம் இழந்து நின்ற போது இனி நாம் வாழ மாட்டோம் என்று. ஆனால் நீதான் அம்மா இந்தக் குடும்பத்தை காப்பாற்றிப் போட்டாய் அதற்கு அனுலா அம்மா நீங்கள் எனக்கு கல்வியைத் தந்தீகளே! அதுதானம்மா எந்தப் பெற்றோரும் கொடுக்கவேண்டிய உண்மையான பொருள் என்று கூறிச் சிரிப்பாள் அதைக் கேட்டதும் அனுலா எங்களை நீர் என்ன இருந்தாலும் விட்டுக் கொடுக்க மாட்டாயே என்று ஆரத்தழுவுவாள்.

இதைநினைக்கும் போதெல்லாம் ஆனந்தம் வெள்ளமாக பெருகும். அவ்வேளையில் சிவகாமி என்னம்மா இவ்வளவு சந்தோசம் என்று கேட்டாள்...... என்று கூறியதும் டீச்சர் டீச்சர் என்று பல குரல்கள் அழைத்தன. அனுலா ஓ! நீங்களா எப்படி சுகமா பிள்ளைகாள்? வாங்கோ இப்படி என்று கூறிச்சிரித்தாள் சிவகாமி ஆமாம் இவங்க வந்து 15 நிமிடமாய் கூப்பிடடு கொண்டிருந்தாங்களாம் நான் வந்துதான் இந்த பூமிக்கு கொண்டுவந்த நான் என்று கூறினாள் சிவகாமி.

அனுலா மன்னித்துக் கொள்ளுங்கோ அம்மா! நான் அந்தப்பிச்சைக்காரர்கள் வந்து கூப்பிட்டதும் பழைய நினைவுக்கு போய் விட்டேன். வாங்கோ பிள்ளைகாள் முன்னறையில் இருப்போம் என்று கூறி அழைத்த ரோபது மாணவர்கள் சென்று அழைத்ததும் துடிப்பான மாணவி சங்கரி, டீச்சர் டீச்சர் உங்கட வீடு அழகாக இருக்கு என்று கூறினாள். அனுலா சிரித்த போது தேனீருடன் வந்த சிவகாமி பிள்ளைகளே இந்த வீடு உங்கட டீச்சர் உழைத்துக் கட்டியதுதான் என்று கூறியபோது அனுலா அடைந்த சந்தோசத்துக்கு அளவே இல்லை. நாங்கள் ஒன்றும் கொடுக்கவில்லையே என்று சிவகாமி முணுமுணுத்தபோது அனுலா குறுக்கிட்டு ஏனம்மா அப்படிச் சொல்றீங்க ஒரு பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு பல சொத்துக்களைக் கொடுப்பர்கள் ஆனால் நீங்கள் தந்தது உறுதியான மெய்யான பொருள் கல்வியம்மா என்று கூறினாள்.

இதைக்கேட்ட சிவகாமி என்னம்மா வீடு, வாசல், பணம், நகை என்று எவ்வளவோ கொடுக்கிறார்கள் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு ஆனால் நாங்கள் அப்படி ஒன்றும்தரவில்லையே அனுலா, என்று கூறியதும் சிரித்துக் கொண்டே அம்மா அந்தக் கைப்பொருள் எல்லாம் நிலையில்லாதது.

அம்மா நீங்கள் தந்த மெய்ப்பொருள் கல்விதான் நிலையானது இதை நீங்களும் உங்கள் அம்மா அப்பரிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும் மாணவர்களே என்று கூறியதும் மாணவர்களும் ஆமோதிப்பது போன்று தலையை ஆட்ட சிவகாமியும் சரி என்று கூற சிரிப்பொலி கூடமெங்கும் நிறைந்தது.

# TEACHERS

**Nature abounds**  
**In richness**  
**Of tree, flower and fruit**  
**Of bird, fish and animal**  
**Man came into**  
**This glories arena**  
**In which lakes and river ripple**  
**And the earth**  
**Enveloped by the warning oceans**  
**Sweet blossoms bloom**  
**In mankind too**  
**Teachers are such bloom**  
**Who impart Knowledge**  
**With dedication**  
**They live in the richness of knowledge**  
**Teachers...... so kind and patient**  
**Of immense charm**  
**They win many hearts**  
**By the endearing deeds**  
**A sweetness**  
**Whose scent lingers on**  
**To anoint the heart and soul**

**By: A.Lavakumaran - Teacher**  
**Bt/ Kovilkulam Vinayagar vidyalayam.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகமொன்று உருவாகின்றது.

(முதலாம் பரிசுபெற்றது)

திருமதி. ச. சரவணமுத்து ஆசிரியை
மட்/ஆரையம்பதி இ.கி.மி.ம.வி.



இன்று புனிதாவின் வாழ்க்கையில் ஒரு இன்பமான நாள் மறக்கமுடியாத நாள். ஆம், அவள் வாழ்க்கையில் தனக்கு விரும்பிய ஒரு தொழிலைச் செய்வதற்கு ஆரம்பிக்கப்போகின்றாள். ஏனைய ஆசிரியர்களுக்கு இது ஒரு தொழிலாக இருந்தாலும் அவளைப் பொறுத்தவரையில் இது ஒரு மகத்தான சேவையாக இருக்கவேண்டும் என்றே கருதுகின்றாள். புனிதா தனது இளம் வயதில் திடசங்கற்பம் பூண்டு கொண்டாள். நான் கட்டாயம் ஒரு ஆசிரியராக வந்து தன்னைப் போல் வறுமயில் தவித்து நொந்து போயிருக்கும் சிறார்களுக்கு கல்வி புகட்டவேண்டும் என்பது அவளுடைய நெடுநாள் ஆசை. புனிதா தனது கிராமத்திலிருந்து தனது சேவையை ஆரம்பீக்கப் போகும் குக்கிரதமமதன மருதச்சோலைக்குப் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தாள். பஸ் ஓட ஓட அவளுடைய மனம் பின்னோக்கிப் பாய்ந்து கொணடிருந்தது. அவள் பாடசாலைக்கு முதலாம் வகுப்பீல் சேரும் காலம் வந்தது. பாடசாலையில் சேருமுன்னரே புனிதாவுக்கு புத்தகங்களைக் கண்டால் ஒரு ஆசை. இந்த உலகத்தில் உள்ள சகல புத்தகங்களையும் தான் படிக்கவேண்டும் என்ற உத்வேகம் மனதில் வரும். ஆனால் பாவம் புனிதா! அவளுடைய ஆசைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய மாதிரி அவளுடைய குடும்பம் இருக்கவில்லை. புனிதா மிகவும் வறுமைப்பட்ட ஒரு குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்பிள்ளை. இவளுடன் சேர்ந்து அந்தக்குடும்பத்தில் மொத்தமாக ஏழு பிள்ளைகள். நான்கு பெண் பிள்ளைகள், மூன்று ஆண்பிள்ளைகள். பனிதா பெண்பிள்ளைகளில் மூத்தவள். குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையாக இருந்தாள். தாயும் தகப்பனோடும் சேர்த்து அந்தக்குடும்பத்தில் மொத்தனாக அக்குடும்பத்தில் ஒன்பது பேர் இருந்தனர். புனிதாவின் தந்தை ஒரு கூலித்தொழில் செய்பவர்.

அவளுடைய அன்றாட வருமானம் முழுக்குடம்பத்தையும் ஓட்டுவதற்கு போதுமானதாக இருக்கவில்லை. வருமை மாத்திரமல்ல அவரை ஆட்கொண்டிருந்தது அறியாமையும் சேர்த்துத்தான் அறியாமை அவரை ஆட்கொள்ளாமல் இருந்திருந்தால் பிள்ளைகள் கூடுதலாகப் பிறந்தால் செலவு கூடும் செலவு கூடினால் இன்னும் இன்னும் வருமையில் வாட வேண்டிய நிலை வரும் என்பதனை அவர் நிச்சயமாக உணர்ந்திருந்தார். பாவம்! என்ன செய்வது அவர் அறியாமையினால் ஏற்பட்ட வறுமையினால் தவித்துக் கொண்டிருந்தார். என்னைப் பொறுத்த வரையில் நான் அடிக்கடி சிந்திக்கும் ஒரு விடயம் என்னவென்றால், மனிதன் அறியாமையினால் வறுமையில் வாடுகின்றானா? அல்லது வறுமையினால் அறியாமை வருகின்றதா? புனிதாவின் தகப்பன் கிருபை எக்காரணத்தினால் வறுமையை வரவேற்கிறானோ தெரியாது. ஆனால் அடுக்கடுக்காக குழந்தைகளை ஈன்று கொண்டிருந்தான்

முதல் பெண் குழந்தையான புனிதா தான் பாடசாலை செல்லும் நாளை எதிர்பார்த்து அருந்தாள் அவளுடைய கிராமத்தில் ஒரு ஆரம்ப பள்ளிக்கூடம் மட்டும்தான் இருந்தது. அந்தக் கிராமத்தை பொருத்தவரையில் அதிகமான மாணவர்கள் 5ம் தரத்துடனேயே தங்களது படிப்பை முடித்து விடுவார்கள். காரணம் வறுமை. அந்த ஊரில் இருந்த பணக்காரர்கள் மட்டும்தான் மேற்படிப்பை தொடர்வதற்கு வேறு ஊருக்கு செல்வார்கள். அந்த ஊருக்கு போவதானால் பஸ்ஸில் ஏறிச்செல்ல வேண்டும் அதற்கு ஒரு நாளைக்கு 6 ரூபாய் தேவை அது மாத்திரமல்ல இந்தப் பாடசாலைக்கு சென்றது போலல்லாமல் நல்ல சுத்தமாக் தோய்க்கப்பட்டு மினுக்கப்பட்ட உடுப்பு, சப்பாத்து என்பவை எல்லாம் அணிந்து கொண்டுதான் போக வேண்டும் ஆரம்பப் பாடசாலையில் ஒரு கொப்பியிலேயே எல்லாப்பாடங்களையும் செய்து காட்டலாம் ஆனால் இந்தப்பள்ளியில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக கொப்பிகள் வாங்க வேண்டும். இவை எல்லாவற்றையும் மனதில் கொண்டு அந்த ஊரில் இருக்கும்ட ஏழைப் பிள்ளைகள் மேல் வகுப்புக் கல்வியை கற்க முன் வர மாட்டார்கள். ஊரில் ஒரு ஆரம்பப் பாடசாலை இருக்கின்றது. இதனால் அந்த ஊரில் இருக்கும் எல்லா பிள்ளைகளும் ஆரம்பக் கல்வியைக் கற்றிருக்கலாம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நினைக்கலாம். ஆனால் அதுவுமில்லை. ஆனால் அந்த ஊரில் பெரும்பான்மையானவர்கள் கூலி வேலை செய்பவர்கள். இவர்கள் அங்குள்ள பணக்காரர்களின் வீட்டிலும் வீட்டு வேலைகளைச் செய்வார்கள். இப்பணக்காரர்கள் இப்பெற்றோரை மாத்திரமல்ல அவர்களுடைய குழந்தைகளையும் தமது வீட்டில் வேலை செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள். நினைத்ததையே நடத்தி முடிப்பவர்கள். அப்படியான நிலைக்குத்தான் புவனாவும் தள்ளப்பட்டாள். "அப்பா நான் நாளைக்கு பாடசாலைக்கு போறனே?" புனிதா கேட்டாள், சிறுமியாக "அவள் ஒரே வேறபுள்ளையன்ற புத்தகத்தையெல்லாம் வாங்கி வாங்கி பார்க்கிறாள். புள்ளைக்கு படிக்கிறதுக்கு சரியான ஆசை. அந்தப்போடியாரின் மகள் பள்ளிக்கு இரண்டு வரிசமாய்ப் போறாளாம் ஆனா இன்னும் அம்மா என்ற சொல்லை எழுதுகிறாள் இல்லையாம் ஆனால் நம்முட புள்ள அதுகன்ற கொப்பியெல்லாம் வாங்கிப்பார்த்துத்தானே எழுதப்பழகினாள். நம்முட மூத்த பெடியன்தான் படிக்க உடாம நீங்க வேலை செய்யுற ஊட்டுல உட்டனீங்க இந்தப் பிள்ளையையும் அப்படிச் செய்திராதீங்க ஆண்டவனுக்காண்டி புனிதாவைப் பள்ளியில சேர்த்திடுங்க. இப்ப புத்தகம், உடுப்பு எல்லாம் அரசாங்கம் தருகுது தானே. புனிதாவின் தாய் அன்னம்மா தனது கணவன் கிருபையிடம் மன்றாடினாள்.

"இதெல்லாம் நாம யோசித்து செய்யிற வேலையில்ல கொஞ்சம் பொறு போடியாரர ஊட்ட போய் கேட்டுத்து வாறன் அதுகள் நம்மள விட விசயம் தெரிஞ்சதுகள். ஒரு வேலையைத் தொடங்குவதற்கு முன்ன இதால என்ன நன்ம, என்ன தீம என்டு நாம அலசி ஆராய வேணும் நம்மள விட போடியாருக்கு அவர் பொஞ்சாதிக்கெல்லாம் எல்லா விசயமும் தெரியும். இந்தா வாறன் அவியள்ட்டக் கேட்டுத்து" என்று சொல்லிக் கொண்டு தான் வேலை செய்யும் போடியாரின் வீட்டுக்கு விரைந்தான் கிருபை. அவனுடைய சத்தத்தைக் கேட்டதும் போடியாரும் அவருடைய மனைவியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். "இதென்னடா கிருபை உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு நல்லா யோசிச்சுப்பாரு புத்தகமும் உடுப்பும்தான் அரசாங்கம் கொடுத்திருக்கு இதுரெண்டும் காணும் படிக்கிறதுக்கு இன்னும் எவ்வளவோ செலவிருக்கு உனக்கு இது மட்டும் புள்ளையென்டா பரவாயில்ல இன்னும் எத்தனையிரிக்கி உன் ஒருவனால எல்லாத்துக்கும் உழைக்கலாமா உனக்கு இப்ப இளமையில இருந்தமாதிரி உசாருமில்ல மனிசன்ட வாழ்க்க எவ்வளவு நாளைக்கு உனக்குப்பிறகு ஆரு உழைக்கிற, உண்ட மகன் மட்டும் உழைச்சிக்காணுமா? அது மட்டுமில்ல இது பொட்டப்புள்ள படிச்சி என்ன செய்யப் போறாள்? என்றாள் போடியாரின் மனைவி. பாரதியாரின் பெண் விடுதலை, பெண் சுதந்திரம் "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்பதெல்லாம் போடியாரின் மனைவி போன்ற பெண்களுக்கு சென்றேறவில்லைப்போல

"நல்லா யோசிச்சுப்பாரு அவள் படிச்சா உண்ட காசுல கொஞ்சம் வீணாகும் வேலைக்கு உட்டா உனக்கு காசி வரும். அப்ப காசி வாறது நல்லமோ போறது நல்லமோ யோசிச்சுப்பாரு. நீ அங்க இஞ்ச வேலைக்கு உடத்தேவையில்லை. எங்கட ஊட்டுக்கு கொண்டுவா நாங்க மூனு வேளையும் சாப்பாடு குடுக்கிறம். இதைத்தவிர வேறென்ன வேணும் ஒரு புள்ளைக்கு? என்று கேட்டார் போடியார். அவருடைய மனதில் நின்றது ஒருமனிதனின் வயிறும் அதற்குத் தேவையான சாப்பாடும் மட்டும்தான். இந்தப் புனிதா என்ற சிறுமிக்கும் அவளைப்போன்ற எல்லா பிள்ளைகளுக்கும் உள்ளம் என்று உன்னதமான பொருளொன்று இருக்கிறது. அதை மிகவும் மதிப்புள்ள ஒன்றாய் அதை பக்குவமாக கையாள வேண்டும் என்ற எண்ணம் தோன்றாமல் விட்டு விட்டது.

புனிதாவின் தந்தை ஓடிப்போய் விசயத்தைச் சொன்னார். போடியார் வீட்டிலேயே தனது மனைவி வேலைக்கு வரச்சொன்னது மகளுக்கு ஒரு பெரிய வேலைக்கு "அப்பொயின்மென்ற்" கிடைத்த மாதிரி இருந்தது அவளுக்கு அவ்வளவு சந்தோசம் பாரு போடியாரும் பொஞ்சாதியும் நம்மட குடும்பத்துல எவ்வளவு அக்கற எனக்கு நாம கஸ்டப்படுறது அவங்களுக்கு விருப்பப்படல நம்மல பெத்த தாய் தகப்பனும் இப்படி நமக்கு உதவி செய்யல்ல. கிருபை, மனைவியிடம் கூறினான். சிறுவர் உரிமையில் ஒன்றான கட்டாயக் கல்வி பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் தெரிந்திருக்க நியாயமில்லை. தந்தையின் சொல்லைக் கேட்ட புனிதா குழம்பினாள், துடித்தாள், அழுதாள் அந்த பிஞ்சு மனதில் கட்டி வைத்த கோட்டை ஒரு நொடியில் சிதறியது முயற்சியைக் கைவிடவில்லை தனது தந்தைக்கு. தான் வீட்டு வேலை செய்து கொண்டிருக்கும் போடியாரின் குடும்பத்துக்கும் தெரியாமல் இடையிடையே பாடசாலைக்கும் சென்றாள். தனது ஆரம்பப் படிப்பை முடித்தவள் ஐந்தாம தர புலமைப்பரிசில் பரீட்சையில் நல்ல சித்தியடைந்தாள். இதனால் அவளுக்கு அரசாங்கத்தின் உதவிப்பணம் கிடைத்தது. அதன் உதவியுடனும் அந்த ஊரிலுள்ள ஒரு சில நல்ல உள்ளங்களினது உதவியுடனும் புனிதா மேற்படிப்பைத் தொடர்ந்தாள். அவளுக்கு தான் சிறுவயதில் பட்ட கஸ்டத்தை நினைத்தால் கண்கலங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது அவள் ஒரு ஆசிரியையாகிவிட்டாள் தன்னைப்போல அறியாமையின் கோரப்பிடிக்குள் சிக்கித்தவிக்கும் சிறுவர்களின் பெற்றோரை நினைத்துக் கொண்டாள். "என் கடன் பணி செய்து கிடப்பதே"எனும் வாக்கியம் மனதை வருடிச்சென்றது. அவளுடைய மனதில் ஒரு வைராக்கியம் பிறந்தது. நான் சாகும் வரை பெற்றோரின் அறியாமையையும் பணக்கார வர்க்கத்தின் சுய நலத்தையும் ஏழைச்சிறுவர்களின் முன்னேற்றத்தில் பாதிப்பு ஏற்பட்டதற்கு அனுமதிக்க மாட்டேன். "மருதச்சோலை வந்து விட்டது".என்ற பஸ் நடத்துனரின் குரல் கேட்டு சுய நினைவுக்கு வந்தாள் புனிதா. "அப்பாடா இந்தப்பஸ்ஸின் வேகத்தை விட என் மன வேகம் கூடியது. இவ்வளவு நேரத்துக்குள் என்னை இருபது வருடங்கள் பின்னால் அழைத்துச் சென்று விட்டதே" வியந்தாள் புனிதா. பஸ்ஸிலிருந்து இறங்கினாள். இப்பொழுது இவள் சிறுமி புனிதா அல்ல. இவள் ஒரு ஆசிரியை. புதிய சிந்தனையோடு, மனவுறுதியோடு இச்சமூகத்தின் அறியாமையை களைய இருக்கும் பாரதி கண்ட புதுமைப்பெண் இவள். தான் என்ன காரியங்கள் சமூகத்திற்கு செய்யவேண்டும் என்பதை திட்டமிட்டுக்கொண்ட ஒரு பெண் இவளால் ஒரு புதுச் சமூகம் உருவாகப் போகின்றது. இதற்காகத்தன காலமுழுவதையும் அவள் அர்ப்பணிக்கப்போகின்றாள். புதுயுகமொன்று உருவாகிறது. உருவாக வேண்டும்.

# ஆசிரியர்

அறிவாம் அமுதை அனைத்துத் தருபவர்
அறநெறி காட்டும் அறிவுரை சொல்பவர்

ஆதி இறைவனின் அருளுருப் பெற்றவர்
ஆதவன் போன்று அகஇருள் அழிப்பவர்

இதயத் தாய்மையால் இதயம் கவர்பவர்
இனிய வார்த்தையை என்றும் உடையவர்

ஈன்ற தாய்போல் இரக்கம் உள்ளவர்
ஈடிலாப் புகழின் இருப்பிடம் ஆனவர்

உத்தம நடத்தையால் உள்ளம் ஈர்ப்பவர்
உண்மையை இறைவனாய் உணர்ந்து வாழ்பவர்

ஊக்கம் ஊட்டி உயர்வுறச் செய்பவர்
ஊனுடல் நலத்தை உரைத்து வளர்ப்பவர்

எழுத்தறி வித்த இறைவன் ஆனவர்
எவரையும் சமமாய் மதிக்கும் தன்மையர்

ஏணி தோணிபோல் என்றும் இருப்பவர்
ஏடும் நாடும் ஏற்ற உயர்ந்தவர்

ஐயந் திரிபற அறிவுரை தருபவர்
ஐம்புலப் பயிற்சியால் அறிவை விதைப்பவர்

ஒழுக்கம் வாழ்வில் உயிர்மூச் சென்பவர்
ஒற்றுமைச் சிறப்பை ஓயா துரைப்பவர்

ஓர்மையும் அறிவும் ஒருமித் துள்ளவர்
ஓதிய சொல்லை உறுதியாய்க் காப்பவர்

ஔவையின் மொழிகளை அடிக்கடி உரைப்பவர்
ஔடதம் போன்ற அரிய தன்மையர்

திரு. வி. விஜேந்திரன் ஆசிரியர்
மட்/காங்கேயனோடை அல்-அக்ஸா ம.வி
ஆரையம்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மையக் கல்வி
## (சிறுகதை)

விக்னேஸ்வரரைத் துயில் எழுப்ப அதிகாலை வேளை ஆலயத்தில் ஒலித்த சுப்பிரபாதம் காற்றலை மேவி புதுக்குடியிருப்புக் கிராமத்துக்கே புத்துணர்வை அளித்துக் கொண்டிருந்தது. அதற்கு முன்னரே துயில் எழுந்து தனது கடமைகளை முடிக்க முயன்று கொண்டிருந்த பொன்னிக்கு தனது கடைக்குட்டியின் விளையாட்டுத் தொல்லையில் சுப்பிர பாத சுருதியோ படலையடியில் நின்று கூப்பிட்ட முஸ்தபா முதலாளியின் சத்தமோ கேட்கமுடியாதிருந்தது. மீண்டும் மீண்டும் முஸ்தபா முதலாளி மேசனார் மேசனார் என்று கூப்பிட்ட குரலை விட இவனோட என்னதான் கஸ்டப்பட வேண்டியிருக்கு விடிஞ்சும் விடியாததுமான நேரத்துல எழும்பித்து சும்மா ஓரிடத்தில இருக்காம அதில் ஏறி இதில் பாய்ந்து தொந்தரவு செய்கிறான். கேட்டா டீச்சர்தான் சொன்னவ என்கிறான் இப்ப என்ன படிப்போ?

மேசனார் மேசனார் என்று படலையில் ப்ட் பட் என்று தட்டிக்கூப்பிட்ட சத்தத்துக்குத்தான், பேசாதடா யாரோ கூப்பிடுறாங்க. பாட்பம் என்று வந்த போது முஸ்தபாவைக் கண்ட பொன்னி வாங்க நாநா இந்த நேரத்தில வந்திருக்கிறியள் இப்படி இருங்க என்று பாயை உதறிப் போட்டுத்து தேனீரைக் கொண்டுவந்து நீட்டி முதலில இதைக் குடிங்க என்று அன்போடு கூறினாள் அதென்னத்துப் புள்ளமா சொல்லுற சுபஹுக்கு வாங்கு செல்ல எழும்பி பள்ளிவாசலுக்கு போயித்து கடாபி கொட்டலில இஞ்சிப் பிளேண்டி அடிச்சித்து சைக்கிள மிதிக்க நல்லாத்தான் இருந்திச்சி. காத்தான்குடி தெரு விளக்கு கண்ணைப் பறிக்க உசாரில வந்துக்கிட்டு இருந்தன். ஆரயம்பதி ஆஸ்பத்திரி தாண்டின பிறகு எரியிர சந்தனக்குச்சியில தெரிகிற நெருப்புத்துண்டு மாதிரி மின்னிக்கிட்டு இருந்து மின் வெளிச்சத்தில வரப்போ அந்த ராணுவ முகாமுக்குமுன்னால கிடந்த கல்லில சைக்கிள் இடற மாவித்தியாலயக் கிறவுண்டில ரெண்டு நடயன்கள் என்னைத் துரத்த உசிர கையில புடிச்சிட்டு ஓடி வந்த நான் உங்கட ஊட்டடில வந்துதான் மூச்சு விட்டன் தாயும் மகனும் பொட்ட சத்தத்துல எண்ட பதட்டம் நிண்டு போச்சு. என்ற நாநாவ தேத்தண்ணி குடிங்க நாநா அடே அடே விழுந்திடுவா இறங்குடா என்றாள் மோட்டுவளையில் இருந்த மகனைப்பார்த்து பொன்னி.

ஊட்டில என்ற இளையவளும் இப்படித்தான் புள்ளம்மா என்ற ஊட்டுக்காரியும் சத்தம் போட்டா, சேர் சொல்லுறமாதிரி இந்த உம்மாவுக்கு ஒண்டும் தெரியாது. பழைய ஆக்களெல்லாம் சரியான பயந்தாங் கொள்ளி எங்களைப்போல தைரியமா விளையாடி வியைகாடிப் படிக்கவேண்டும் எண்டு உம்மாவைப் பகிடி பண்ணுவா இவனும் அப்படித்தான் என்னவோ கண்டறியாத கல்வியாம் 6 முதல் 14 வயதுகட்டாயக் கல்வியாம் எண்டு கிழட்டுக்கதை கதைச்சி யாரு வந்தாலும் பயமில்லாம கேள்வி மேல் கேள்வி கேட்டு குடஞ்சி போடுவான். பள்ளிக்குப் போய் மூன்று மாதமாச்சி கொப்பில இன்னும் அ,ஆ.... ஒழுங்கா எழுதத்தெரியாம என்னவோ கோடு, சுழி, வட்டம் போட்டு வாறான் எண்டு கேட்டா உங்களுக்கு ஒண்டும் தெரியா டீச்சர் கைவிரலைப் புடிச்சு மண்ணில எழுதின காலம் மலையேரிப் போய்விட்டது பயத்தில பள்ளிக்கு ஒழிச்ச காலமும் இப்ப இல்லை இத இப்படித்தான் செய்யவேண்டும் எண்டு கட்டளையிட்ட ஆசிரியர் மையக்கல்வி இப்ப இல்லையாம் மூதுரைப்படி அச்சம்தவிர் என்று பயத்தைப் போக்கி மாணவர்களது அறிவு, திறன், மனப்பாங்குகளில் செயற்பாடு, விளையாட்டு மூலம் ஆளுமையை ஏற்படுத்துற மாணவர் மையக்கல்வியாம் இப்ப ஆசிரியர்கள் வழிகாட்டியாகத்தான் இருப்பார்கள் என்று பொரிந்து தள்ளினாள் பொன்னி.

இவரப் புடியாளாப் புடிச்சு பள்ளியில போய் கேட்டுத்து வரச் சொல்லி அனுப்பப்போன அனிசனுக்கு டீச்சர் என்ன சொக்குப்பொடி போட்டளோ தெரியல வந்த மனிசன் தன்ர மகன் சொன்னதுதான் சரி என்று சொல்லத்தாரு நாநா.

இப்படித்தான் என்ற ஊட்டுக்காரியும் என்னை நச்சரிக்கிட்டு இருந்தா. முந்தநாள் நானும் இல்ல அவளும் பின்னால மீன் வெட்டித்திருந்தா. சமுத்திக்காராக்கள் வந்து ஊட்டில யாரும் இல்லையா எண்டு கேட்க, ஏன் என்ன வேணும் எண்டு கேட்டு சோடாவும் ஊத்திக்குடுத்துட்டு அவங்க கேட்ட கேள்விக்கெல்லாம் டக்கு டக்கு எண்டு சொன்னாளாம். எனக்கோ அவவுக்கோ பதினொரு புள்ளங்கட வயதோ பெயரோ அக்கம் பக்கத்துக்காரரது விபரமோ தெரியாது. வந்ததுகள் இவளச் சரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டிக்காரி, யார் படிப்பிக்கிற எண்டு கேட்க நாங்க தரம் ஒண்டில 43 பேர் படிக்கிறம், நாங்க எல்லாரும் ஒற்றுமையாக, அன்பாக பழகிறம், மாக்கமுறைப்படி நடக்க அசிரியர் வழிகாட்டிறாரு என்று சோழும் பொரி பொரியிறமாதிரி பொரிந்து தள்ளினாளாம்.

இப்பத்தைய கல்விச் சீர்திருத்தம் வருங்காலச்சந்ததியை நல்ல திறமைசாலிகளாக்கும். உன்னப்புள்ளயாக பெத்ததுக்கு உங்க உம்மா வாப்பாவுக்கு தாங்க நன்றி சொல்லிட்டுப்போகுதுகளாம் எண்டு மகள மடியில வைச்சிக் கொஞ்சிக் கொஞ்சி பொடு பொடு என்று சொன்னாவு. நான் தான் இப்பத்தய படிப்ப பிழையா விளங்கித்தன். இப்ப விளங்கித்தன் எண்டு சொன்னாவு புள்ள. நீ செல்லச் செல்ல நான் ஏன் போயக் கேட்கல எண்டு இப்ப விளங்குதா என்று நானும் தலை நிமிர்ந்து கேட்க மத்த மத்தப் புள்ளங்களப் போல இவளுக்கும் வாப்பாட மக்குப் புத்தி தான் வருமோ எண்டு பயந்து தான் சென்னான் எண்டு மடக்கிப் போட்டா எண்டா பாத்துக்க புள்ள. இதெல்லாம் மெய்தானா நானா? நானும் தெரியாம டீச்சர்மாரை ஏசிப்போட்டேன் உன்று பொன்னி அங்கலாய்க்க யாரு முஸ்தபா முதலாளியா என்று கேட்டுக்கொண்டு வந்த வேலாப்போடியாரும் என்ன பிரசங்கம் நடக்கிற மாதிரி இருந்திச்சே என்று கேட்க பிரசங்கமில்ல மேசனார் இப்பத்தைய படிப்பையும் நம்ம புள்ளங்களைப்பத்தியும் கதைச்சிக்கிட்டு இருந்த நாங்க. நல்லாச் சொல்லுங்க என்னை குட்டிகுசெடுப்பா நேத்தும் பள்ளியில அபிவிருத்திச் சங்கக் கூட்டம் நடந்ததாம் அங்க பரமக்குட்டி பெண்சாதியும் பார்வதமும் கதைச்சதக் கேட்டிருந்த நான் இப்ப மண்முனைப் பற்று பாடசாலைக்குள்ள புதுக்குடியிருப்பில் தானாம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிள்ளைகள் படிக்குதாம் அந்த அதிபர் வந்த பிறகு பௌதிகவளம், படிப்பு எல்லாம் சரியான முன்னேற்றமாம் இப்ப அந்த பொடிச்சி சொன்ன பிறகுதான் எனக்கும் கல்விச் சீரமைப்பு அதில் உள்ள நன்ம பாடசாலையில தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தொடக்கம் க.பொ.த (சா/த), உயர்தரம் வரை நல்ல முறையில பாஸ் பண்ணி பல்கலைக்கழகம் நம்மட கல்விக் கல்லூரிக் கெல்லாம் கனபிள்ளைகள் எடுபட்டுப் போறத்தோட விளையாட்டுப் போட்டி, தமிழ்தினப் போட்டி, நாடகப் போட்டி எண்டு எல்லாப் போட்டிகளிலும் எடுபட்ட பிள்ளைகளின் விபரமெல்லாம் வாசிக்க வாசிக்க ஒரே சந்தோச ஆரவாரமாம். புதிய கல்வி சீர்திருத்தம் ஆரம்ப முதல் உயர்தரம் வரை மாணவர்கள் தாங்களாகவே உணர்ந்து செயற்பாடு மூலமும் விளையாட்டு மூலமும் கணிப்பீடு ஒப்படை செயற்றிட்டம் என்று புதுமைப் பூக்களாக பூத்துக்குலுங்குவதற்கு மாணவர்களை மையமாகக் கொண்ட புதிய கல்விச் சீர்திருத்தம் தான் முக்கிய காரணமாம். பிள்ளைகள் எல்லா மட்டங்களிலும் பரிசு பெற பெற்றோருடைய ஊக்கமும் ஒத்துழைப்பும் மாணவர்களின் கடின உழைப்பும் ஆசிரியர்களின் அயராத அர்ப்பணிப்புகளுமே காரணம் என்று அதிபர் கூறினாராம். அதற்கு பெற்றோர்கள் சார்பாக வட்ட விதான வயிரமுத்து எழும்பி உங்களது கடமை கண்ணியம் கட்டுப்பாடே நிர்வாக இயந்திரத்தை நேர்த்தியாக இயங்க வைத்து பௌதிக வளத்திலும் சரி கல்வி அபிவிருத்தியிலும் சரி மேம்பட்ட நிலைக்கு இப்பாடசாலையை உயர்த்தியுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது என்பதே பெற்றோர்களின் முடிந்த முடிவு என்று கூற எதனையும் மறுதலிக்கும் மனப்பாங்குடைய மணடிப்போடி கூட எதுவுமே பேசாதிருந்து ஏகோபித்த கைதட்டல் மத்தியிலும் சரி என்று ஆமோதித்ததும் அவர் கூறியது யாவும் நிறைந்த மொழி என்பதனை நிரூபித்தது என்றும் கூறிச்சி. நன்றி கூறிய பிரதி அதிபரும் எல்லாப் பெற்றோரும் புதிய கல்விச் சீர்திருத்தத்தில் மாணவர் மையக்கல்வியே இலக்காகக் கூறப்பட்டுள்ளது. படித்த எவரும் வேலை வேலை என்று வீதியில் நிற்காது செயற்பாட்டுக் கல்வி மூலம் கற்க பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்புவது பெற்றோரின் கடமை எனக் கூறினார் என்று சொல்லிச்சி.




சரி மேசனார் நல்ல விசயங்களைத் தெரிந்து கொண்டோம். நாளைக்கு வந்து என்ர வேலையை முடிச்சித்தந்திரு என்று கூறி முஸ்தபா சைக்கிளை தள்ளிக்கொண்டு போனார்.
(பாத்திரங்கள் யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

அன்ன அன்னக் குறையாது
அடுத்து அடுத்து ஊறிவரும்
பள்ளமான நெஞ்சிடையும்
பாய்ந்து சென்று மகிழ்வூட்டும்
உள்ளமெங்கும் ஒளியேற்றி
உடைந்த இருட்டை விலக்கிவிடும்
கள்ளமான நெஞ்சினையும்
கண்ணாடியென ஆக்கிவிடும்

கல்விக்கில்லை ஓர் ஆழம்
கடலைக்கூட வென்றுவிடும்
கல்விக்கில்லை ஓர் உயரம்
காணும் வானும் சிறுத்துவிடும்
கல்வியென்பது போர்வாளாகும்
கல்வி விலங்கை வெட்டிவிடும்
கல்வியென்பது கரும்பாகும்
கடிக்கக் கடிக்க இனிப்பு வரும்

பரந்த உலகை நாமறிய
விரிந்த மனத்தை நாமடைய
வரந்தான் கல்வி அதனை நா
இறந்து விடுதற்கிடையினிலே
திறந்து பார்த்து முத்தைப்போல்
தினமும் பொறுக்கி எடுத்திட்டால்
கரங்கள் தந்து கண்ணிமை போல்
காத்து எம்மை வாழ்விக்கும்

ஜனாப் ஐ.எல்.எம். தாஸிம் (அதிபர்)
மட்/கர்பலா அல்மனார்
வித்தியாலயம்.

# A Dignified Profession

A teacher's job is not rare
It reeled in me as sweet things,
As sweet as I could bare Like the petal of rose in the springs.
The art of teaching makes a stare
Like exultant task of wealthy kings.

The common praise as candle,ladder,and the best
